சுருக்கம்

ஆட்சி எல்லை – திருவள்ளூர் மாவட்டம் – தற்போதைய பொன்னேரி கோட்டத்தை சீரமைத்து புதிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி.1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 86 நாள்.09.03.2012.

படிக்கவும் :

1. அரசு கடித எண்.45849/வ.நி.1(1)/2011, வருவாய், நாள் 15.11.2011.
2. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் கடித எண்.23434/2011/அ1, நாள் 15.11.2011.
3. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.ந.க.பணி.6(4)/ 67164/2011, நாள் 23.11.2011.

**********

ஆணை:–

14.11.2011 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னேற்றமான நிருவாகம் திறம்படச் செய்வதற்கும் பணிகள் பொதுமக்களைச் செவ்வனே சென்றடைவதற்கும் பொன்னேரி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, பொன்னேரி மற்றும் மாதவரம் வட்டங்களை உள்ளடக்கி அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இவ்வறிவிப்பு குறித்து முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

2. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் அடிப்படையில் பொன்னேரி கோட்டத்தைச் சீரமைத்து புதிய அம்பத்தூர் கோட்டம் அமைப்பது குறித்த அன்னாரது அறிக்கையைக் கீழ்க்கண்டவாறு அனுப்பியுள்ளார்:–

i) திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட பொன்னேரி கோட்டம் 40% பரப்பளவு கொண்டது என்றும், அம்பத்தூர், மாதவரம், பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய 4 வட்டங்களை உள்ளடக்கியது என்றும், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளில் 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு பொன்னேரி வருவாய்க் கோட்ட அலுவலர்தான் தேர்தல் பதிவு அலுவலராகச் செயல்படுகிறார் என்றும், மாதவரம் மற்றும் அம்பத்தூர் வட்டங்களில் உள்ள சட்டம் ஒழுங்கு பிரச்சனை, மீனவர் பிரச்சனை, தொழிற்சங்கத் தகராறுகள் மற்றும் ஜாதி தகராறுகள் போன்ற பிரச்சனைகளை பொன்னேரி வருவாய்க் கோட்ட அலுவலர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதால் நல்ல நிர்வாகம் ஏற்படவும் பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கும் புதிய அம்பத்தூர் வருவாய்க் கோட்டம் அமைப்பது அவசியமாகிறது. தற்போதைய பொன்னேரி கோட்டத்திலிருந்து அம்பத்தூர் மற்றும் மாதவரம் வட்டங்களைப் பிரித்து புதிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

ii) புதிய அம்பத்தூர் கோட்டம் பிரித்தல் தொடர்பான நிலைப்படிவத்தினைக் கீழ்க்கண்டவாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ளார்.

| வ. எண். | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி கோட்டம் | | உத்தேச பிரிவினைக்குப் பின் கோட்டம் | | | | அரசு ஆணை (நிலை) 279, வருவாய் நாள் 09.06.2003–ன்படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொன்னேரி | | உத்தேசிக்கப்பட்ட கோட்டம் | | எஞ்சிய கோட்டம் | | |
| | | | | அம்பத்தூர் | | பொன்னேரி | | |
| 1 | தலைமையிடம் | பொன்னேரி | | அம்பத்தூர் | | பொன்னேரி | | |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ) | 1321.74 ச.கி.மீ | | 257.49 ச.கி.மீ | | 1064.25 ச.கி.மீ | | குறைந்த அளவு 1000 ச.கி.மீ அதிகளவு 4500 ச.கி.மீ |
| 3 | மக்கள் தொகை | 20,46,891 | | 15,00,776 | | 5,46,115 | | |
| 4 | வருவாய்க் கோட்டத்தின் பெயர் | பொன்னேரி | | அம்பத்தூர் | | பொன்னேரி | | |
| 5 | சட்டமன்றத் தொகுதியின் பெயர் | 1 | கும்மிடிப்பூண்டி | 1 | மதுரவாயல் | 1 | கும்மிடிப் பூண்டி | |
| | | 2 | பொன்னேரி | 2 | அம்பத்தூர் | 2 | பொன்னேரி | |
| | | 3 | மதுரவாயல் | 3 | மாதவரம் | | | |
| | | 4 | அம்பத்தூர் | 4 | திருவொற்றியூர் | | | |
| | | 5 | மாதவரம் | 5 | ஆவடி (பகுதி) | | | |
| | | 6 | திருவொற்றியூர் | | | | | |
| 6 | பாராளு–மன்றத் தொகுதியின் பெயர் | திருவள்ளூர் (பாகம்) | | திருபெரும்புதூர் (பாகம்) | | திருவள்ளூர் (SC) (பாகம்) | | |
| | | திருபெரும்புதூர் (பாகம்) | | வடசென்னை (பாகம்) | | | | |
| | | வடசென்னை (பாகம்) | | | | | | |
| 7 | நகராட்சி களின் எண்ணிக்கை பெயருடன் | சென்னை மாநகராட்சி மண்டலம் 7,11,1,2,3 | | சென்னை மாநகராட்சி மண்டலம் 7,11,1,2,3 | | | | |
| | | திருவேற்காடு நகராட்சி (பகுதி) | | திருவேற்காடு நகராட்சி (பகுதி) | | | | |
| | | ஆவடி நகராட்சி (பகுதி) | | ஆவடி நகராட்சி (பகுதி) | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | ஊராட்சி ஒன்றியங்-களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1 | வில்லிவாக்கம் | 1 | வில்லிவாக்கம் | 1 | மீஞ்சூர் | |
| | | 2 | புழல் | 2 | புழல் | 2 | கும்மிடிப்பூண்டி | |
| | | 3 | மீஞ்சூர் | | | 3 | சோழவரம் | |
| | | 4 | கும்மிடிப்பூண்டி | | | | | |
| | | 5 | சோழவரம் | | | | | |
| 9 | சிறப்பு பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 1 | பொன்னேரி | | நாராவாரிகுப்பம் | 1 | பொன்னேரி | |
| | | 2 | மீஞ்சூர் | | | 2 | மீஞ்சூர் | |
| | | 3 | ஆரணி | | | 3 | ஆரணி | |
| | | 4 | கும்மிடிப்பூண்டி | | | 4 | கும்மிடிப்பூண்டி | |
| | | 5 | நாராவாரிகுப்பம் | | | | | |
| 10 | வட்டங்களின் எண்ணிக்கை / பெயருடன் | 1 | அம்பத்தூர் | 1 | அம்பத்தூர் | 1 | பொன்னேரி | குறைந்த அளவு 100 கிராமங்கள் |
| | | 2 | மாதவரம் | 2 | மாதவரம் | 2 | கும்மிடிப்பூண்டி | |
| | | 3 | பொன்னேரி | | | | | |
| | | 4 | கும்மிடிப்பூண்டி | | | | | |
| 11 | வருவாய் கிராமங்-களின் எண்ணிக்கை | 1 | அம்பத்தூர் 43 | 1 | அம்பத்தூர் 43 | 1 | பொன்னேரி 150 | குறைந்த அளவு 100 கிராமங்கள் |
| | | 2 | மாதவரம் 34 | 2 | மாதவரம் 34 | 2 | கும்மிடிப்பூண்டி 82 | |
| | | 3 | பொன்னேரி 150 | | | | | |
| | | 4 | கும்மிடிப்பூண்டி 82 | | | | | |
| | | | மொத்தம் 309 | | மொத்தம் 77 | | மொத்தம் 232 | |
| 12 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | | 176 | | 20 | | 156 | |

iii) புதியதாக உருவாக்கப்பட உள்ள அம்பத்தூர் கோட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யவேண்டிய பணியிட விவரங்கள் பின்வருமாறு:-

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | பொன்னேரி வருவாய் கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | பொன்னேரி வருவாய் கோட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு மாற்றப்படும் பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட வேண்டிய மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வருவாய்க் கோட்ட அலுவலர் | 1 | 1 | - | 1 | 1 |
| 2. | வருவாய்க் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | - | 1 | 1 |
| 3. | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | - | 1 | 1 |
| 4. | உதவியாளர் | 3 | 3 | - | 3 | 3 |
| 5. | இளநிலை உதவியாளர் | 2 | 2 | - | 2 | 2 |
| 6. | தட்டச்சர் | 2 | 1 | 1 | - | 1 |
| 7. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | - | 1 | 1 |
| 8. | அலுவலக உதவியாளர் | 3 | 2 | 1 | 1 | 2 |
| 9. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | - | 1 | 1 |
| 10. | காவலர் | - | - | - | 1 | 1 |
| | மொத்தம் | 15 | 13 | 2 | 12 | 14 |

iv)மேலும், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் உள்ள காலி மனையில் புதிய அம்பத்தூர் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டலாம் என்றும், தற்காலிகமாக கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்கலாம் என்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

v) புதியதாகத் தோற்றுவிக்கப்பட உள்ள அம்பத்தூர் கோட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்க்கண்டவாறு ஏற்படும் என முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்**

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | ரூ.48,58,428/- |
| 2. | மின்சாரக் கட்டணம் | 20000 X 6 மாதம் 1,20,000 |
| 3. | எரிபொருள் (டீசல்) | ரூ.99,000/- (165 லி X ரூ.50 X 12 மாதங்கள்) |
| 4. | தொலைபேசிக் கட்டணம் | 25,500/- (ரூ.4,250 X 6 மாதங்கள்) |
| | மொத்தம் | ரூ.51,02,928/- |

**II. தொடரா செலவினங்கள்**

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டடம் | 1 | 1,26,34,000 |
| 2 | கோட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 23,24,000 |
| 3 | தளவாடங்கள் | - | 2,00,000 |
| 4 | ஈப்பு | 1 | 5,56,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 4 | 20,000 |
| | மொத்தம் | | ரூ.1,59,40,000/- |

3. மேலே பத்தி 2 –இல் தெரிவிக்கப்பட்டுள்ள முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) அரசாணை (நிலை) எண்.279, வருவாய், நாள் 09.06.2003ல் புதிய கோட்டம் உருவாக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல்களில் (Norms) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அம்பத்தூர் கோட்டம் பரப்பளவு மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை, மீனவர் பிரச்சனை, தொழிற்சங்கத் தகராறுகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டும், நல்ல

நிருவாகம் ஏற்படவும், பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டும், மேற்படி அரசாணையினை தளர்த்தியும் திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போதுள்ள பொன்னேரி கோட்டத்தினைச் சீரமைத்து, பொன்னேரி கோட்டத்திலிருந்து அம்பத்தூர் மற்றும் மாதவரம் வட்டங்களைப் பிரித்து அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு இணைப்பு–I இல் கண்டுள்ளவாறு புதிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் அம்பத்தூர் கோட்டத்திற்கு பொன்னேரி வருவாய் கோட்டத்திலிருந்து மறுபணிபரவலமர்த்தல் (Re-deployment) மூலம் 2 பணியிடங்களும் மற்றும் 12 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்தும் ஆக மொத்தம் 14 பணியிடங்களுக்கு இணைப்பு –II இல் கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் அம்பத்தூர் கோட்டத்திற்கு தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூ.51,02,928/–க்கும், தொடரா செலவினமாக ரூ.1,59,40,000/–க்கும் இணைப்பு –III இல் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

4. இந்த ஆணையின் இணைப்பு–I இல் கண்டுள்ள அறிவிக்கை 09.03.2012–ம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய கோட்டம் 16.04.2012 முதல் செயல்படும்.

5. மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3 (iii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

(அ) 01 01 பணியாளர் சம்பளங்கள் ரூ.48,58,000/–
2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – I திட்டத்தில் சேராதது – AB - வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(து.தொ.கு: 2053-00-094-AB-0102)

(ஆ) 05 01 தொலைபேசி கட்டணங்கள் – ரூ.25,500/– தொடரும் செலவினம் மற்றும் ரூ.6,000/– தொடரா செலவினம்
05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள்
(து.தொ.கு: 2053 - 00 - 094 - AB - 0513)

(இ) 05 03 மின்சாரக் கட்டணம் ரூ.1,20,000/– தொடரும் செலவினம்:-
05 அலுவலகச் செலவுகள் 03 மின் கட்டணங்கள்
(து.தொ.கு.: 2053 – 00 – 094 – AB - 0531)

(ஈ) **05 05 –அறைகலன் ரூ.2,00,000/– தொடரா செலவினம்:–**
**05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்**
**(து.தொ.கு: 2053 – 00 – 094 – AB - 0559)**

(உ) **19 01 இயந்திரமும் சாதனமும் ரூ.1,20,000/– தொடரா செலவினம்:–**
**19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்**
**(து.தொ.கு.: 2053 – 00 – 094 – AB - 1914)**

(ஊ) **21 01 மோட்டார் வண்டிகள் ரூ.5,56,000/– தொடரா செலவினம்:–**
**21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்**
**(து.தொ.கு.: 2053 – 00 – 094 – AB - 2119)**

(எ) **76 01 கணினியும் துணை பாகங்களும் ரூ.95,000/–:–**
**76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்**
**(து.தொ.கு.: 2053 – 00 – 094 – AB - 7614)**

7. **கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான ரூ.1,26,34,000/– செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.**

**4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலக கட்டடங்கள்–051 கட்டுமானம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC நிலவரி – 16 பெரும் பணிகள்**
**(து.தொ.கு.: 4059 – 01 – 051 – JC - 1609)**

8. **கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்கான (ரூ.23,24,000/–) செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.**

**4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசுக் குடியிருப்புக் கட்டடங்கள் – 106 பொதுத் தொகுப்பு இடவசதி JC – வருவாய்த்துறை – வீட்டு வசதித் திட்டங்கள் – 16 பெரும் பணிகள்.**
**(து.தொ.கு 4216 - 01 - 106 - JC - 1601)**

9. **மேலே பத்தி 3(iii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2012–13 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.**

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.13177/நிதி(வருவாய்)/2012–1, நாள் 09.03.2012 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ்ராம் மிஸ்ரா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை –600079. (09.03.2012– ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பொது (தேர்தல்) துறை, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை –104
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.

நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (வருவாய்/வ.செ.பொது–I/II/CMPC) துறை, சென்னை–9.
சட்ட அலுவலர் (கணக்கெடுப்பு), பொதுத்துறை, சென்னை–9.
அனைத்து பிரிவுகள் வருவாய்த்துறை, சென்னை–9. (தக்க மேல் நடவடிக்கைக்காக)
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/3/2012
பிரிவு அலுவலர்.

9-3-12

# இணைப்பு –I

## அரசாணை (நிலை) எண்.86, வருவாய், நாள் 09.03.2012

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி கோட்டத்தைச் சீரமைத்து அம்பத்தூர் மற்றும் மாதவரம் வட்டங்களை உள்ளடக்கி அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அம்பத்தூர் கோட்டம் 2012– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிதாக உருவாக்கப்படும் அம்பத்தூர் கோட்டத்தில் உள்ளடங்கும் வட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது பொன்னேரி கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி அம்பத்தூர் கோட்டாட்சியரால் 2012–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

அட்டவணை

| வ.எண். | கோட்டத்தின் பெயர் | வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | அம்பத்தூர் | 1. அம்பத்தூர்<br>2. மாதவரம் |

ரமேஷ்ராம் மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

9/3/2012
பிரிவு அலுவலர்

9-3-12

## இணைப்பு –II

அரசாணை (நிலை) எண்.86, வருவாய் நாள் 09.03.2012

புதியதாக உருவாக்கப்பட்ட அம்பத்தூர் கோட்டத்திற்கான பணியிட விவரம்

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | பொன்னேரி வருவாய் கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | பொன்னேரி வருவாய் கோட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு மாற்றப்படும் பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் | அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட வேண்டிய மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வருவாய்க் கோட்ட அலுவலர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | வருவாய்க் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | உதவியாளர் | 3 | 3 | – | 3 | 3 |
| 5. | இளநிலை உதவியாளர் | 2 | 2 | – | 2 | 2 |
| 6. | தட்டச்சர் | 2 | 1 | 1 | – | 1 |
| 7. | பதிவறை எழுத்தர் | 1 | 1 | – | 1 | 1 |
| 8. | அலுவலக உதவியாளர் | 3 | 2 | 1 | 1 | 2 |
| 9. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| 10. | காவலர் | – | – | – | 1 | 1 |
| | மொத்தம் | 15 | 13 | 2 | 12 | 14 |

ரமேஷ்ராம் மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

9/3/2012
பிரிவு அலுவலர்

9-3-12

## இணைப்பு –III

அரசாணை (நிலை) எண்.86, வருவாய், நாள் 09.03.2012

**I.** தொடரும் செலவினங்கள்

| வ. எண். | விவரம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | ரூ.48,58,428/– |
| 2. | மின்சாரக் கட்டணம் | ரூ.20,000 X 6 மாதம் 1,20,000/– |
| 3. | எரிபொருள் (டீசல்) | 99,000/– (165 லி X ரூ.50 X 12 மாதங்கள்) |
| 4. | தொலைபேசிக் கட்டணம் | 25,500 (ரூ.4,250 X 6 மாதங்கள்) |
| | மொத்தம் | ரூ.51,02,928/– |

**II.** தொடரா செலவினங்கள்

| வ.எண். | விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டிடம் | 1 | 1,26,34,000 |
| 2 | கோட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 23,24,000 |
| 3 | தளவாடங்கள் | – | 2,00,000 |
| 4 | ஈப்பு | 1 | 5,56,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 4 | 20,000 |
| | மொத்தம் | | ரூ.1,59,40,000 |

ரமேஷ்ராம் மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

9/3/2012
பிரிவு அலுவலர்

9-3-12